

கரணவாய்

கதிர்காமர் காங்கேய உடையார் வழித்தோன்றல்

**அமரர் மயில்வாகனம் பொன்னம்பலம் அவர்களின்**

சிவபதப்பேறு குறித்த

# பொன் மலர்

15-07-2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கரணவாய் கதிர்காமர் காங்கேய உடையார் வழித்தோன்றல்

பொன்னம்பலம் மயில்வாகனம் அவர்களின்

சிரேஷ்ட புத்திரன்

## அமரர் திரு. மயில்வாகனம் பொன்னம்பலம்

அவர்கள்

சிவபதப் பேறடைந்தமை குறித்த

# பொன் மலர்

15-07-2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்





**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**

**அன்பு என்பது அருளுக்கு முதலாகி,**
**மனத்தில் நிகழும் நேயம் ஆகும். அன்பு உடையார்க்கு,**
**பிறர்கண் துன்பம் கண்டதுமே, கண்ணீர் விழுமாதலின்,**
**அவ்வருளாளனே**
**அன்புள்ளம் படைத்தவன் என்பது திண்ணம்.**
**அன்புள்ள இடத்திலே தியாகம் அன்பு விட்டு மலரும்.**
**அத்தகையே அன்பே உருவாய் இப்பூவுலகிலே எல்லா**
**உயிர்களையும் நேசித்து, மண்ணில் மாண்புறு**
**மானுடனாய் வாழ்வியலின் தத்துவமாய் வாழ்ந்து**
**இறைவனடி கலந்த**
**எனது அன்புக் கணவருக்கு இம்மலர்**
**சமர்ப்பணம்.**

**- மனைவி -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தோற்றம்:
12-05-1946

மறைவு:
25-06-2021
26

# அமரர்.
# மயில்வாகனம் பொன்னம்பலம்

## திதி வெண்பா

ஆண்டு பிலவ ஆனிமாத அபரபக்கம்
பூண்ட துவிதியை புனிதநாள் - மாண்புமிகு
பொன்னம்பலம் ஆசிரியர் பொய்யான உலகைநீத்து
பொன்னார்மேனியன் தாளடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## விநாயகர் துதி

**பிடியத னுருவுமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்**
**கடிகண பதிவர வருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.**

## பன்னிரு திருமுறை

திருச்சிற்றம்பலம்

### முதலாம் திருமுறை

தலம்: திருப்பிரம்மாபுரம் பண்: நட்டபாடை

**நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி**
**ஏர்பரந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்**
**ஊர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிதுவென்னப்**
**பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.**

### இரண்டாம் திருமுறை

தலம்: திருநெல்வாயிலரத்துறை பண்: பியந்தைக்காந்தாரம்

**நீல மாமணி மிடற்று நீறணி சிவனெனப் பேணும்**
**சீல மாந்தர்கட் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றால்**
**கோல மாமல ருந்திக் குளிர்புன னிவாமல்கு கரைமேல்**
**ஆலுஞ் சோலைநெல் வாயில் அரத்துறை அடிகள்தம் அருளே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் திருமுறை

தலம்: பொது பண்: கௌசிகம்

**மந்த ரம்மன பாவங்கள் மேவிய**
**பந்த னையவர் தாமும் பகர்வரேல்**
**சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்**
**நந்தி நாமம் நமச்சி வாயவே.**

## நான்காம் திருமுறை

தலம்: விருவடிகைவீரட்டானம் பண்: கொல்லி

**பொன்போல மிளிர்வதொர் மேனியினீர் புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்**
**துன்பேகவ லைபிணி யென்றிவற்றை நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்**
**என்போலிகள் உம்மை யினித்தெளியார் அடியார்படு வதிது வேயாகில்**
**அன்பேஅமை யும்அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே.**

## ஐந்தாம் திருமுறை

தலம்: கோயில்

**அல்ல லென்செயும் அருவினை யென்செயும்**
**தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்**
**தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்**
**கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே.**

## ஆறாம் திருமுறை

தலம்: திருக்கலாயம்

**மாலை யெழுந்த மதியே போற்றி**
**மன்னியென் சிந்தை யிருந்தாய் போற்றி**
**மேலை வினைகள் அறுப்பாய் போற்றி**
**மேலாடு திங்கள் முடியாய் போற்றி**
**ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி**
**அடியார்கட் காரமுத மானாய் போற்றி**
**காலை முளைத்த கதிரே போற்றி**
**கயிலை மலையானே போற்றி போற்றி.**

## எழாம் திருமுறை

தலம்: திருக்குருகாவூர் வெள்ளடை பண்: நட்டராகம்

**பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்**
**ஓடுநன் கலனாக உண்பலிக் குழல்வானே**
**காடுநல் லிடமாகக் கடுவிருள் நடமாடும்**
**வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாம் திருமுறை

பிடித்த பத்து

**புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்**
**பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்**
**என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட**
**ஈசனே மாசிலா மணியே**
**துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காந்**
**தொடக்கெலாம் அறுத்தநற் சோதீ**
**இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருளுவ தினியே.**

## ஒன்பதாம் திருமுறை

பண்: பஞ்சமம்

**நீறணி பவளக் குன்றமே நின்ற**
**நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே**
**வேறணி புவன போகமே யோக**
**வெள்ளமே மேருவில் வீரா**
**ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா**
**அம்பொன்செய் அம்பலத் தரசே**
**ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்**
**தொண்டனேன் இசையுமா றிசைய.**

தலம்: சிதம்பரம் பண்: பஞ்சமம்

**குழல் ஒலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி**
**எங்கும் குழாம்பெருகி**
**விழவொலி விண்ணளா வுஞ்சென்று விம்மி**
**மிகுதிரு வாரூரின்**
**மழவிடை யாற்கு வழிவழி ஆளாய்**
**மணஞ்செய் குடிப்பிறந்த**
**பழவடி யாரொடுங் கூடிஎம் மானுக்கே**
**பல்லாண்டு கூறுதுமே.**

## பத்தாம் திருமுறை

**நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்**
**தேடித் திரிந்து சிவபெரு மானென்று**
**பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்**
**கூடிய நெஞ்சத்தைக் கோயிலாக் கொள்வனே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினொராம் திருமுறை

பொன்வண்ணத் தந்தாதி

**சிந்தனை செய்ய மனமமைத்**
**தேன்செப்ப நாவமைத்தேன்**
**வந்தனை செய்யத் தலையமைத்**
**தேன்கை தொழவமைத்தேன்**
**பந்தனை செய்வதற் கன்பமைத்**
**தேன்மெய் அரும்பவைத்தேன்**
**வெந்தவெண் ணீறணி ஈசற்**
**கிவையான் விதித்தனவே.**

## பன்னிரண்டாம் திருமுறை

தலம்: கோயில்

**ஊன டைந்த உடம்பின் பிறவியே**
**தான டைந்த உறுதியைச் சாருமால்**
**தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்**
**மாந டம்செய் வரதர்பொற் றாள்தொழ.**

*திருச்சிற்றம்பலம்*

## திருமுருகாற்றுப்படை

### வெண்பாக்கள்

**குன்றம் எறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்**
**புன்றலைய பூதப் பொருபடையாய் - என்றும்**
**இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே**
**உளையாய்என் உள்ளத் துறை.**

**குன்றம் எறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்**
**அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்**
**கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்**
**மெய்விடா வீரன்கை வேல்.**

**வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட**
**தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி**
**குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்**
**துளைத்தவேல் உண்டே துணை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா - முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே.

அஞ்சு முகந்தோன்றில் ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்.

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடையே தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா - பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு - சுருங்காமல
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

நக்கீரர் தாம் உரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் - முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான் நினைந்த எல்லாம் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தபுராணம்

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பும் இன்றி
வேதமும் கடந்து நின்ற விமல! ஓர் குமரன் தன்னை
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க! என்றார்.

நாரண னென்னுந் தேவும் நான்முகத் தவனும் முக்கட்
பூரணன் தானு மாகிப் புவிபடைத் தளித்து மாற்றி
ஆரண முடிவுந் தேறா அநாதியாய் உயிர்கட் கெல்லாம்
காரண னாய மேலோன் கழலிணை கருத்துள் வைப்பாம்.

எவ்வெவர் தம்மை யேனும் யாவரே எனினும் போற்றின்
அவ்வவ ரிடமாக் கொண்டே அவர்க்கருள் தருவாய் போற்றி
மெய்வரு தெளிவில் உன்னை வெளிப்பட உணர்ந்து ளோர்க்குத்
தெய்வத போக முத்தி சிறப்பொடு தருவாய் போற்றி.

விரிஞ்சன்மா றேவராலும் வெலற்கரும் விறலோனாகிப்
பெருஞ்சுரர் பதமும்வேத வொழுக்கமும் பிறவும் மாற்றி
யருஞ்சிறை யவர்க்குச் செய்த வவுணர்கோ னாவி கொள்வான்
பரஞ்சுட ருருவாய் வந்த குமரனைப் பணிதல் செய்வாம்.

முண்டக மலர்ந்த தன்ன மூவிரு முகமுங் கண்ணுங்
குண்டல நிரையுஞ் செம்பொன் மவுலியுங்கோல மார்பும்
எண்டரு கரமீ ராறு மிலங்கெழிற் படைகள் யாவுந்
தண்டையுஞ் சிலம்பு மார்க்குஞ் சரணமுந் தெரியக் கண்டான்.

பன்னிரு தடந்தோள் கொண்ட பகவனைப் பாலனென்றே
யுன்னலை யவன்கை வேலா லொல்லையிற் படுதி கண்டா
யின்னுயிர் துறக்க நின்றா யென்மொழி கேட்பா யன்றே
சென்னியில் விதியை யாவ ராயினுந் தீர்ந்தா ருண்டோ.

கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்திஇம் மூர்த்தி அன்றோ.

ஆவதோர் காலை எந்தை ஆறிரு தடந்தோள் வாழ்க
மூவிரு வதனம் வாழ்க முழுதருள் விழிகள் வாழ்க
தூவுடை நெடுவேல் வாழ்க தொல்படை பிறவும் வாழ்க
தேவர்கள் தேவன் சேயோன் திருவடி வாழ்க என்றான்

தேவர்கள் தேவே ஓலம் சிறந்த சிற்பரனே ஓலம்
மேவலர்க் கிடியே ஓலம் வேற்படை விமலா ஓலம்
பாவலர்க் கெளியாய் ஓலம் பன்னிரு புயத்தாய் ஓலம்
மூவரும் ஆகி நின்ற மூர்த்தியே ஓலம் ஓலம்.

அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகி
கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகமுய்ய

முழுமதி அன்ன ஆறு முகங்களும் முந்நான்கு ஆகும்
விழிகளின் அருளும் வேலும் வேறு உள படையின் சீரும்
அழகிய கரம் ஈராறும் அணிமணித் தண்டை ஆர்க்கும்
செழுமலர் அடியும் கண்டான் அவன் தவம் செப்பல்பாற்றோ

## கந்தர் அனுபூதி

நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்து உருகத்
தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்
செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்.

ஆடும் பரி, வேல், அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானைச் சகோதரனே.

உல்லாச, நிராகுல, யோக இதச்
சல்லாப, விநோதனும் நீ அலையோ?
எல்லாம் அற, என்னை இழந்த நலம்
சொல்லாய், முருகா சுரபூ பதியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானோ? புனல் பார் கனல் மாருதமோ?
ஞானோ தயமோ? நவில் நான் மறையோ?
யானோ? மனமோ? எனை ஆண்ட இடம்
தானோ? பொருளாவது சண்முகனே.

கெடுவாய் மனனே, கதி கேள், கரவாது
இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடு வேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே.

கூகா என என் கிளை கூடி அழப்
போகா வகை, மெய்ப்பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலு கவித்
தியாகா சுரலோக சிகாமணியே

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன், பிறவான், இறவான்
சும்மா இரு, சொல் அற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே.

முருகன், தனிவேல் முனி, நம் குரு என்று
அருள் கொண்டு அறியார் அறியும் தரமோ
உரு அன்று, அரு அன்று, உளது அன்று, இலது அன்று,
இருள் அன்று, ஒளி அன்று என நின்றதுவே.

பேராசை எனும் பிணியில் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ?
வீரா, முது சூர் பட வேல் எறியும்
சூரா, சுர லோக துரந்தரனே.

பாழ்வாழ்வு எனும் இப் படுமாயையிலே
வீழ்வாய் என என்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தன தாம் உளவோ?
வாழ்வாய் இனி நீ மயில் வாகனனே.

எம் தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்
கந்தா, கதிர் வேலவனே, உமையாள்
மைந்தா, குமரா, மறை நாயகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு ஆறையும் நீத்து அதன் மேல் நிலையைப்
பேறா அடியேன், பெறுமாறு உளதோ?
சீறாவரு சூர் சிதைவித்து, இமையோர்
கூறா உலகம் குளிர்வித்தவனே.

தன்னந் தனி நின்றது, தான் அறிய
இன்னம் ஒருவர்க்கு இசைவிப் பதுவோ?
மின்னும் கதிர் வேல் விகிர்தா, நினைவார்
கின்னம் களையும் க்ருபை சூழ் சுடரே.

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே.

## கந்தரலங்காரம்

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப்ர பஞ்சமென்னும்
சேற்றைக் கழிய வழிவிட்ட வா! செஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் க்ருபாகரனே.

அழித்துப் பிறக்கவொட்டா அயில் வேலன் கவியையன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே.

ஓரவொட் டாரொன்றை யுன்னவொட் டார் மலரிட்டுனதாள்
சேரவொட்டார் ஐவர் செய்வதென் யான்சென்று தேவருய்யச்
சோரநிட் லுடுரனைச் சூநனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட்டாரி யிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே.

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோ ளிருந்த படியிருங் கோளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் தொளைக்கவை வேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க ளுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா உடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே.

கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி யுண்ணவொட்டாது உங்களத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வருமோ நும் மடிப்பிறகே.

தண்டா யுதமுந் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலுனக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாவந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே.

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையும் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மாநந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே.

குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென்செயுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.

## திருப்புகழ்

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள மவையாட
மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்
கதைவி டாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய்மீள விஜய னேறு தேர்மீது
கனக வேத கோடூதி அலைமோதும்
உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
உவண மூர்த்தி மாமாயன் மருகோனே
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே.

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவர் ருயிர்க்குஞ் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தளத்துட னடக்குங் கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் பெருமாளே.

சரணகம லால யத்தை அரைநிமிஷ நேர மட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூட மட்டி பவவினையி லேச னித்த
தமியன்மிடி யால்ம யக்க முறுவேனோ
கருணைபுரி யாதி ருப்ப தெனகுறையி வேளை செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலே செச்சை
கமழுமண மார்க டப்ப மணிவோனே
தருணமிதை யாமி குத்த கனமதுறு நீள்ச வுக்ய
சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞான முத்தி பரகதியு நீகொ டுத்து
தவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா
அருணதள பாத பத்ம மதுநிதமு மேது திக்க
அரியதமிழ் தான ளித்த மயில்வீரா
அதிசயம நேக முற்ற பழநிமலை மீது தித்த
அழகதிரு வேர கத்தின் முருகோனே.

விடமடைசு வேலை அமரர்படை சூலம்
விசையன்விடு பாண மெனவேதான்
விழியுமதி பார விதமுமுடை மாதர்
வினையின்விளை வேதும் அறியாதே
கடியுலவு பாயல் பகலிரவெ னாது
கலவிதனில் மூழ்கி வறிதாய
கயவனறி வீனன் இவனுமுயர் நீடு
கழலிணைகள் சேர அருள்வாயே
இடையர்சிறு பாலை திருடிகொடு போக
இறைவன்மகள் வாய்மை அறியாதே
இதயமிக வாடி யுடையபிளை நாத
கணபதியெ னாம முறைகூற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையலவர் ஆவி வெருவஅடி கூர
அசலுமறி யாமல் அவரோட
அகல்வதென டாசொல் எனவுமுடி சாட
அறிவருளும் ஆனை முகவோனே.

திருமகள் உலாவும் இருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள்காண்!
செகதலமும் வானும் மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்!
மருவும் அடியார்கள் மனதில் விளையாடு
மரகத மயூரப் பெருமாள்காண்!
மணி தரளம் வீசி அணி அருவி சூழ
மருவு கதிர்காமப் பெருமாள்காண்!
அருவரைகள் நீறு பட, அசுரர் மாள,
அமர்பொருத வீரப் பெருமாள்காண்!
அரவு பிறை வாரி விரவு சடை வேணி
அமலர் குருநாதப் பெருமாள்காண்!
இருவினை இலாத தரு வினை விடாத
இமையவர் குல ஈசப் பெருமாள்காண்!
இலகு சிலை வேடர் கொடியின் அதி பார
இருதன விநோதப் பெருமாளே

## கந்தர் அந்தாதி

செவ்வந்தி நீலப் புயமுரு காபத்தர் சித்தமெய்யிற்
செவ்வந்தி நீலத்தை யுற்றருள் வாய்திங்கட் சேய்புனைந்த
செவ்வந்தி நீலத் தொருபாகர் போன்ற தினிச்சிந்தியார்
செவ்வந்தி நீலத்தி னீடுமுற் றாத திமிரமுமே.

## வேல் விருத்தம்

மகரம்அள றிடைபுரள உரககண பணமவுலி
மதியும் இரவியுமலையவே
வளரெழிலி குடருழல இமையவர்கள் துயரகல
மகிழ்வுபெறு மறுசிறையவாஞ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகரவரை மனைமறுகு தொறுநுளைய மகளிர்செழு
செநெல்கஙளொடு தரளம் இடவே
செகசிரப கிரதிமுதல் நதிகள்கதி பெற உததி
திடர்அடைய நுகரும் வடிவேல்
தகரமிரு கமதமென மணமருவு கடகலுழி
தருகவுளும் உறுவள் எயிறுந்
தழைசெவியும் நுதல்விழியும் உடையஒரு கடவுள்மகிழ்
தருதுணைவன் அமரர்குயிலுங்
குகரமலை எயினர்குல மடமயிலும் என,ருவர்
குயமொடமர் புரியுமுருகன்
குமரன்அறு முகன்எதிரும் விருதுநிசி சரர்அணிகள்
குலையவிடு கொடியவேலே.

## மயில் விருத்தம்

சந்தான புஷ்பபரி மளகிண் கிணீ முகச்
சரணயுக ளமிர்தப்ரபா
சந்த்ரசே கரமூஷி காரூட வெகுமோக
சத்யப்ரி யாலிங்கனச்
சிந்தா மணிக்கலச கரகட கபோலத்ரி
யம்பக விநாயகன்முதற்
சிவனைவலம் வருமளவில் உலகடைய நொடியில்வரு
சித்ரக் கலாபமயிலாம்
மந்தா கிநிப்பிரப வதரங்க விதரங்க
வனசரோ தயகிர்த்திகா
வரபுத்ர ராஜீவ பரியங்க தந்திய
வராசலன் குலிசாயுதத்
திந்த்ராணி மங்கில்ய தந்து ரட்ஷாபரண
இகல்வேல் விநோதன் அருள்கூர்
இமையகிரி குமரிமகன் ஏறுநீ லக்ரீவ
ரத்னக் கலாப மயிலே.

## சேவல் விருத்தம்

உலகில் அனுதினமும் வரும் அடியவர்கள் இடரகல
உரியபர கதிதெரியவே
உரகமணி எனவுழலும் இருவினையும் முறைபடவும்
இருள்கள்மிடி கெட அருளியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகமிடும் அலகைகுறள் மிகுபணிகள் வலிமையொடு
கடினமுறவரில் அவைகளைக்
கண்ணைப் பிடுங்கியுடல் தன்னைப் பிளந்து சிற
கைக்கொட்டி நின்றாடுமாம்
மலைகள் நெறு நெறு நெறென அலைகள் சுவறிட அசுரர்
மடியஅயில் கடவுமுருகன்
மகுட வட கிரியலைய மலையுமுலை வனிதை குற
வரிசையின மகள்அவளுடன்
சிலைகுலிசன் மகள்மருவு புயன் இலகு சரவண
சிறுவன்அயன் வெருவவிரகிற்
சிரமிசையில் வெகு சினமொட் அடியுதவும் அறுமுகவன்
சேவற் திருத்துவஜமே.

## வேல் வகுப்பு

பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தவிதழ் மறச்சிறுமி
விழிக்குநிக ராகும் (1)

பனைக்கமுக படக்கரட மதத்தவள
கசக்கடவுள் பதத்திடுநி களத்துமுளை
தெறிக்கவர மாகும் (2)

பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு
கவிப்புலவன் இசைக்குருகி வரைக்குகையை
யிடித்துவழி காணும் (3)

பசித்தலகை முசித்தழுது முறைப்படுதல்
ஒழித்தவுணர் உரத்துதிர நிணத்தசைகள்
புசிக்கவருள் நேரும் (4)

சுரர்க்குமுநி வரர்க்குமக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்குநரர் தமக்குகுறும்
இடுக்கண்வினை சாடும் (5)

சுடர்பருதி ஒளிப்பநில வொழுக்குமதி
ஒளிப்பஅலை யடக்குதழல் ஒளிப்பவொளிர்
ஒளிப்பிரபை வீசும் (6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர்
நினைக்கினவர் குலத்தைமுத லறக்களையும்
எனக்கோர்துணை யாகும் (7)

சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை
யடுத்தபகை யறுத்தெறிய வுருக்கியெழு
மறத்தைநிலை காணும் (8)

தருக்கிநமன் முருக்கவரின் இருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிக ராகும் (9)

தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுண
வழைப்பதென மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை வாகும் (10)

தனித்துவழி நடக்குமென திடத்துமொரு
வலத்துமிரு புறத்துமரு கடுத்திரவு
பகற்றுணைய தாகும் (11)

சலத்துவரும் அரக்கருடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை யெனச்சிகையில்
விருப்பமொடு சூடும் (12)

திரைக்கடலை யுடைத்துநிறை புனர்கடிது
குடித்துடையும் உடைப்படைய அடைத்துதிர
நிறைத்துவிளை யாடும் (13)

திசைக்கரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்ததென முகட்டினிடை பறக்கவற
விசைத்ததிர வோடும் (14)

சினத்தவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்தெயிறு கடித்துவிழி
விழித்தலற மோதும் (15)

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன்மலை
விருத்தனென துளத்திலுறை கருத்தன்மயில்
நடத்துகுகன் வேலே (16)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்திப் பதிகம்

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளியது

திருச்சிற்றம்பலம்

தலம்: பொது பண் : கௌசிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. (1)

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே. (2)

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே. (3)

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே. (4)

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே. (5)

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே. (6)

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே. (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே. (8)

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓதும் நாமம் நமச்சி வாயவே. (9)

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சி வாயவே. (10)

நந்தி நாமம் நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே. (11)

திருச்சிற்றம்பலம்

## முத்திப் பதிகம்

### திருநாவுக்கரசு நாயனார் அருளியது

திருச்சிற்றம்பலம்

தலம்: திருப்புகலூர்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கமே பூண்டாய் அனலா டினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்சடை யினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே. (2)

பையரவக் கச்சையாய் பால்வெண் ணீற்றாய்
பளிக்குக் குழையினாய் பண்ணா ரின்சொல்
மைவிரவு கண்ணாளைப் பாகங் கொண்டாய்
மான்மறிகை ஏந்தினாய் வஞ்சக் கள்வர்
ஐவரையும் என்மேல் தரவ றுத்தாய்
அவர்வேண்டும் காரியமிங் காவ தில்லை
பொய்யுரையா துன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (3)

தெருளாதார் மூவெயிலுந் தீயில் வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்ற தேவே
மருளாதார் தம்மனத்தில் வாட்டந் தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க் கென்றும்
அருளாகி ஆதியாய் வேத மாகி
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்துங் காணாப்
பொருளாவாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (4)

நீரேறு செஞ்சடைமேல் நிலாவெண் டிங்கள்
நீங்காமை வைத்துகந்த நீதி யானே
பாரேறு படுதலையிற் பலிகொள் வானே
பண்டனங்கற் காய்ந்தானே பாவ நாசா
காரேறு முகிலனைய கண்டத் தானே
கருங்கைக் களிற்றுரிவை கதறப் போர்த்த
போரேறே உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிசடையாய் வேதியனே வேத கீதா
    விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச் சூராய்
திரிபுரங்கள் எரிசெய்த தேவ தேவே
    திருவாரூர்த் திருமூலட் டானம் மேயாய்
மருவினியார் மனத்துளாய் மாகா ளத்தாய்
    வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தா யென்றும்
புரிசடையாய் உன்னடிக்கே போது கின்றேன்
    பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (6)

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
    திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி
    நான்முகனும் இந்திரனும் மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
    கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
    பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (7)

நெய்யாடி நின்மலனே நீல கண்டா
    நிறைவுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
    மான்தோல் உடையா மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
    கொண்டடியேன் நானிட்டுக் கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
    பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (8)

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூய நீற்றாய்
    துதைந்திலங்கு வெண்மழுவாள் கையி லேந்தித்
தன்னனையுந் தண்மதியும் பாம்பும் நீருஞ்
    சடைமுடிமேல் வைத்துகந்த தன்மை யானே
அன்ன நடைமடவாள் பாகத் தானே
    யக்காரம் பூண்டானே ஆதி யானே
பொன்னனங் கழலடிக்கே போது கின்றேன்
    பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
　　உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
　　இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
　　கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
　　பூம்புகலூர் மேவிய புண்ணி யனே. (10)

*திருச்சிற்றம்பலம்*

## முத்திப் பதிகம்

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது

*திருச்சிற்றம்பலம்*

தலம்: திருநொடித்தான்மலை　　　　பண்: பஞ்சமம்

தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே. (1)

ஆனை உரித்தபகை அடியேனொடு மீளக்கொலோ
ஊனை உயிர்வெருட்டி ஒள்ளியானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலஞ்செய்தெனை யேறவைக்க
ஆனை அருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே. (2)

மந்திரம் ஒன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசேசெயுந் தொண்டன்எனை
அந்தர மால்விசும்பில் அழகானை யருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்தான்மலை உத்தமனே. (3)

வாழ்வை உகந்தநெஞ்சே மடவார் தங்கள் வல்வினைப்பட்
டாழ முகந்தவென்னை அதுமாற்றி அமரரெல்லாம்
சூழ அருள்புரிந்து தொண்டனேன் பரமல்லதொரு
வேழம் அருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே. (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுல கிற்பிறந்து நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்டனேன்இன்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை உத்தமனே. (5)

அஞ்சினை ஒன்றிநின்று அலர்கொண்டடி சேர்வறியா
வஞ்சனை யென்மனமே வைகிவானநன் னாடர்முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்டனேன்பர மல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே. (6)

நிலைகெட விண்ணதிர நிலம்எங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானைஏறி வழியேவரு வேனெதிரே
அலைகட லால்அரையன் அலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம் நொடித்தான்மலை உத்தமனே. (7)

அரவொலி ஆகமங்கள் அறிவார்அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே. (8)

இந்திரன் மால்பிரமன் னெழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவன்ஆர்என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்மலை உத்தமனே. (9)

ஊழிதொ றூழிமுற்றும் உயர்பொன்நொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல ஊரன்சொன்ன
ஏழிசை இன்றமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சையப்பர்க் கறிவிப்பதே. (10)


திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் வாழ்க்கையில் சில நிகழ்வுகள்...





தெல்லிப்பழை காசிவிநாயகர் தீர்த்தத் திருவிழா





தெல்லிப்பழை குருநாத சுவாமி கோயில் வசந்த மண்டப அடிக்கல் நாட்டல்



தாய் தந்தையுடன்



சிவத்தமிழ்ச்செல்வியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் அதீனகர்த்தாவின் இரங்கல் உரை

சைவமும் தமிழும் பேணிப்புரந்து போற்றிவரும் தெல்லிப்பழையில் தமது குலத்தின் மேன்மைகளையும் பண்பாடுகளையும் போற்றிக் காத்து வருகின்ற உயர் குடித் தோன்றலான அமரர் மயில்வாகனம் பொன்னம்பலம் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபை உறுப்பினராக இருந்து சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இருந்த காலத்தில் ஆலயத்தோடு தொடர்பு கொண்டு மகளிர் இல்லம் பெண்கள் தொண்டர் சபை ஆகியவற்றில் இணைந்து சேவை புரிந்த திருமதி. கலாதேவி பொன்னம்பலம் இளைப்பாறிய விரிவுரையாளர் அவர்களின் அன்புக் கணவர் இறைபதம் அடைந்தார்.

மானிட வாழ்வு பிறப்பு இறப்பு இறைவனின் நியதியே வாழ்கின்ற வாழ்க்கை உண்மையானதாகவும் நேர்மையானதாகவும் வாழ்ந்து எம்மால் மற்றவர்களுக்கு என்ன நன்மை செய்யக் கூடியதாக இருக்கின்றதோ அதை செயலாற்றிச் செய்ய வேண்டும். உயிர்களிடத்தில் அன்பும் கல்வியிலே மேன்மையும் சமய சமூக தொண்டாற்றுதல் இவையே ஒரு மனிதனின் பண்புகளாக சொல்லப்படுகின்றது. எல்லோராலும் மதிக்க வாழ்த்த அமரர் பொன்னம்பலத்தின் ஆத்மா சிவன் திருவடிகளை அடைய பிரார்த்திக்கின்றேன்.

**லோகா சமஸ்த்தா சுகினோ பவந்து!**

இங்ஙனம்,
**சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்,**
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில்,
மருதனார்மடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுருவின் ஆத்மசாந்தி பிரார்த்தனை

கரணவாயை பிறப்பிடமாக கொண்டவரும் தெல்லிப்பழை கிழக்கு யாமா வளவை வசிப்பிடமாகக் கொண்டவருமான மயில்வாகனம் பொன்னம்பலம் அவர்கள் தெல்லிப்பழையில் சந்ததி சந்ததியாக சைவபரம்பரையை சேர்ந்த சுந்தரமூர்த்தி கலாதேவி அவர்களை கைப்பிடித்து தெல்லிப்பழையில் வசித்துவரும் காலம் இடப்பெயர்வின் போது நான் அவர் இல்லத்திற்கு அருகாமையில் நான் குடியிருந்தேன் அப்போது அவர்களுக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு கிடைத்தது.

அவர் தமிழ் சைவ அறிவை நிரம்ப பெற்ற ஒருபெருந்தகை அப்போது அவர் கூறிய சில அறிவுரைகள் இப்போதான் உணருகின்றேன். அவரது மரணசெய்தி கேட்டு மிகவும் வருத்தமுற்றேன். அவர் ஆத்மா சாந்தியடைய துர்க்காதேவியை பிரார்த்திக்கிறேன். எனது ஆசான் கலாதேவி பொன்னம்பலம் அவர்கட்கு ஆழ்ந்த அனுதாபங்களும் ஆறுதலையும் தெரிவித்து கொள்கிறேன்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

இங்ஙனம்,

**சிவஸ்ரீ. சு. செந்தில்ராஜ சிவாசாரியார்**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சொற்செல்வரின் பிரார்த்தனையுரை

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்ல கதிக்கு யாதும்ஓர் குறைவில்லை**
**கண்ணில் நல்லஃ (து) உறும் கழுமல வளநகர்ப்**
**பெண்ணின் நல்லாளோடும் பெருந்தகை இருந்ததே.**

-திருஞான சம்பந்தர்.

இறைபக்தி நிறைந்த இனிய குடும்பத்தில் கரணவாய் திருவூரில் பிறந்தவர் அமரர் மயில்வாகனம் பொன்னம்பலம் ஆசிரியர் அவர்கள். தெல்லிப்பழையில் உயர்சைவப் பாரம்பரியத்தை உயிராகப் போற்றிவரும் குடும்பத்தில் உதித்த கலாதேவி அவர்களைத் திருமணம் செய்து சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தார்கள். அன்பும் பண்பும் நிறைந்த அமரர் அவர்கள் உற்றார். உறவினர்களைப் பேணியதுடன் எவருக்கும் இடையூறு இன்றி அமைதியாக வாழ்ந்த பெருமகன். வீண்வார்த்தை ஏதும் பேசாது ஞானவழியில் தனது முதுமைக் காலத்தைக் கழித்தவர்.

எங்கள் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் மூத்த உறுப்பினராக விளங்கும், இளைப்பாறிய ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் கலாதேவி பொன்னம்பலம் M.A அவர்களின் சமூகப்பணிக்கு அமரர் அவர்கள் உந்து சக்தியாக விளங்கினார். இறை சித்தப்படி விண்ணக அழைப்பை ஏற்று, இறையடியை நோக்கிச் சென்றிருக்கும் பெரியாரின் ஆத்மா சாந்தி பெறத் துர்க்காதேவியைப் பிரார்த்திக்கிறேன். அன்னார் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது பிரிய பத்தினிக்கும் குடும்பத்தவர்களுக்கும் ஆறுதல் கூறி அமைகிறேன்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி!**

இங்ஙனம்,
**கலாநிதி. ஆறு. திருமுருகன்,**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான சிவாசாரியாரின் இரங்கல் செய்தி

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்**

- திருக்குறள்

இந்த உலகுக்குள்ள பெருமை யாதெனில் **'நேற்று இருந்தவர் இன்று இல்லை'** எனும் நிலையில்லாத மனித வாழ்வு. இதனை வள்ளுவர் புகழ்வது போல இகழ்ச்சியாக உலகை பார்த்து உரைத்தார். இவ்வுலகில் அவரவர் பிராரத்துவ வினைக்கேற்ப வந்து பிறந்து அவ்வினை நிறைவு பெற இவ்வுலகை நீத்துச் செல்வது எமது சிந்தாத்த உண்மை.

அந்த வகையில் யாழ் தெல்லியூரிலே உள்ள வீணாகடவை எனும் பதியிலே திகழ்ந்த பொன்னம்பலம் அவர்கள் இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வந்தார். அவர் கருவிலிருந்தே நல்ல குணங்களிற்கு எல்லாம் உறைவிடம் ஆனவர் நிகர் இல்லாத இறைபக்தி உடையவர் சிவ காருண்யமும் தண்ணளியும் கொண்ட இவர் பூவுலகை விட்டு விண்ணுலகத்திற்கு சென்றமை எம்மை எல்லாம் துயரத்திற்கு கொண்டு சென்று விட்டது.

இப்படிப்பட்ட திருவாளர் பொன்னம்பலம் அவர்களின் ஆத்மா பரிபூரண சச்சிதானந்தப் பெரு வாழ்வு பெற்று வாழ வேண்டும் மென ஆசிர்வதிக்கின்றேன்.

இங்ஙனம்,
**சிவஸ்ரீ. இ. பிரசன்னவதனக் குருக்கள்**
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநாதர் சுவாமி கோயில் அர்ச்சகரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

கரணவாயில் உயர் சைவக் குடியிற் பிறந்து தெல்லிப்பழையில் சைவபண்பாட்டு விழுமியங்களைப் போற்றி வாழும் சுந்தரமூர்த்தி வாத்தியார் குடும்ப மருமகனாகி அச்சைவ பாரம்பரியத்திலே வாழ்வாங்கு வாழ்ந்தவர் அமரர் ம. பொன்னம்பலம் அவர்கள். தெல்லிப்பழை குருநாதசுவாமி கோயிலின் பழனியப்பன் திருத்தொண்டர் திருவகுப்பின் பிரதம தொண்டரான சுந்தரமூர்த்தி வாத்தியாரின் அடியொற்றி ஆலய திருப்பணிகளில் பங்கெடுத்துக் கொண்டவர். உதாரணமாக இவ்வாலயத்திலே சண்முகர் பிரதிஷ்டை வசந்தமண்டப நிர்மாணம் என்பவற்றை விருப்புடன் நிறைவேற்றியவர்.

எல்லோருடனும் அன்பாகவும் இனிமையாகவும் பழகும் ஆத்மா இவ்வுலகை நீத்து சிவலோகம் அடைந்துள்ளார்கள். அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் மனைவிக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

**பிரம்மஸ்ரீ. சதா. யோகேஸ்வரசர்மா,**
நித்திய அர்ச்சகர்,
குருநாதசுவாமி கோவில்,
தெல்லிப்பழை.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

தெல்லிப்பழை என்னும் பதியில் சைவ ஆசாரமும் இறை பக்தியும் நிறைந்த சுந்தரமூர்த்தி உபாத்தியாருடைய குடும்பத்தில் அவருடைய செல்வப்புதல்வி கலாதேவி அவர்களை திருமணம் செய்து சிறப்புடன் இல்வாழ்க்கையாம் நல்வாழ்க்கையை நடாத்தி வந்த அமரர் மயில்வாகனம் பொன்னம்பலம் ஆசிரியர் அவர்கள் 25-06-2021 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த செய்தியைக்கேட்டு ஆழ்ந்த அனுதாபத்தைக் தெரிவிப்பதோடு காசிவிநாயகரையும் குருநாத சுவாமியையும் துர்க்காதேவியையும் வணங்கி அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

பிறப்பு இறப்பு இறைவனால் ஏற்படுத்தியவையே என்பதை உணர்ந்து மனச் சாந்தியடைவோமாக.

**சிவஸ்ரீ. இ. கு. சரவணபவக் குருக்கள்**
துர்க்கை அம்மன் கோவிலடி,
துர்க்காபுரம்,
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

நாற்பதாண்டு யாமாவில் நாமிருவ ரிணைந்து
வேற்றுமை யெதுவுமின்றி வேலவனை விநாயகரை
தேற்றுகின்ற அம்பிகையை தேசுடனே வழிபட்டு
வீற்றிருந்த காலத்தில் வீடுதிரும்பும் வரைகாத்திருந்து
ஆற்றொழுக் காகவன்பை யாதரவாய்த் தந்துபின்
கூற்றுவன் வந்தழைத்தால் கூடவே போகமாட்டேன்
போற்றுகின்ற பெருமானின் பொன்னார் திருவடியை
ஏற்றமுடன் நானடைவேன் என்றெனக் குரைத்தபடி
மாற்றங்க ளேதுமின்றி மாதேவன் கழலடைந்தீரோ
தேற்றுவா ரெவருமின்றி தேம்புவதை யறிவீரோ.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tribute to Perri Anna

I have known Perri Anna from the time of my marriage to his brother Kandiah for the past 42 years.

Unfortunately, got to know him well only when we (my husband and myself) stayed at Yamma Walawoo, Perri Anna's home at Thellippalai for few days in 2012 and 2014. I wish we had made that endeavour long before.

During this time both Perri Anna and my husband were having long and intimate chats reminiscing their childhood life and youthful adventures as siblings, in their ancestral home, in a bygone era. These dialogues on the few days we were at his residence, went on post dinner, on each day late into the night and early mornings.
During these exchanges, discerned that he was acknowledged as the brightest in the family, very knowledgeable on worldly matters and on a wide variety of subjects.

He was gentle, kind was fond of small kids and enjoyed their company.

I firmly believe that Perri Anna has joined his parents, Brother and Sister in the Kingdom of God

His memories will be in my heart always, although it was very brief contact.

May his sole rest in peace and attain eternal bliss

- Manga


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மா சாந்திப் பிரார்த்தனை

பெரியண்ணை உங்கள் மறைவுடன் பொன்னுடையா வீட்டின் மூத்த குலவிளக்கு அணைந்து விட்டது. கடைசி காலத்தில் உங்களைப் பார்க்கவோ கதைக்கவோ உதவி செய்யவோ கொடுத்து வைக்கவில்லையென்பது வேதனையாகவுள்ளது.

ஆண்டவனின் காலடியில் நீண்டதுயில் கொள்ளும் உங்களுடைய ஆத்மா சாந்தியடைய அந்த ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

**அன்புச்சகோதரி,**
**பரமேஸ்வரி குடும்பத்தினர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாச்சித்தப்பா

**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு கலாச்சித்தப்பாவின் மறைவிற்குப் பொருந்தும். தினமும் ஒரு சில நிமிடங்களாவது சகோதரி கலாவுடன் உரையாடுவது எனது வழக்கம். 25.06.2021 வெள்ளிக்கிழமையும் சாயந்தரம் சிறிது உரையாடிவிட்டு நான் வேறு செயல்களில் ஈடுபட்டுவிட்டு, என் மன உந்தலினால் சகோதரி கலாவைக் கைத்தொலைபேசியூடாகவும் மற்றும் நிலையான தொலைபேசி இணைப்பு மூலமும் பல தடவை அழைத்தும் பதில் கிடைக்காத நிலையில் மனக்கிலேசம் ஏற்பட்டபோதுதான், கலாச்சித்தப்பா மயங்கிய நிலையில் அவசரமாக தெல்லிப்பழை அரச வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுச் சில நேரத்தில் இறைபதமடைந்து விட்டார் என அறிந்து அதிர்ச்சியடைந்தோம்.

கடந்த சில வாரங்களாக சகோதரி கலாவுடன் உரையாடும் போது கலாச்சித்தப்பாவின் உடல்நிலை பற்றியும் சில நான் சொல்லுவேன். கலாச்சித்தப்பா மிக மெலிந்த, உயரமான தோற்றமுடையர். பக்கத்திலுள்ள கூட்டுறவு வைத்தியசாலைக்குக் கூட்டிச் சென்று அவரைப் பரிசோதனைக்கு உட்படுத்தி உடல்நிலை பற்றி அறிவது நல்லது என்று நான் கூறும்பொழுது, அவர் எனக்கு ஒரு நோயுமில்லை, நான் ஒரு இடமும் வரமாட்டேன் என்று உடன் பதில் வரும்.

எனது பிள்ளைகள் சிறு குழந்தைகளாக இருந்த காலத்திலேதான் கலாவின் திருமணம் நிகழ்ந்தது. அன்று தொட்டுக் கலாச்சித்தப்பா எனது பிள்ளைகளுடன் மிக அன்புடன் பழகினார்அவர்களுக்குக் கதை சொல்லவும், வீட்டைச் சுற்றி நின்ற மா, பலா, நாவல், அண்ணமுண்ணா, கொய்யா போன்ற பழங்களைப் பறித்து வைத்துப் பழுத்தபின் பிள்ளைகளுடன் பகிர்ந்துசாப்பிடவும் பொழுது போய்விடும். அத்துடன் தனது இளமைப்பருவம், பாடசாலை அனுபவங்கள், முக்கியமாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்தமைபற்றியும் பகிர்ந்துள்ளார். நாம் அந்நிய நாட்டில் குடியேறிய பின்னர் தொலைத்தொடர்பு சாதனங்களூடாக உரையாடிய நேரத்திலும் பல கதைகள் சொல்லிச் சிரிக்க வைப்பார். எப்போதும் மகிழ்ச்சியுடன் எம்முடன் உரையாடுவார்.

அவரும் கலாவும் அயலிலுள்ள கோயில்களின் திருப்பணி வேலைகள், திருவிழாக்கள், தண்ணீர்ப்பந்தல் போன்றவற்றில் எப்போதும் முன்னிற்பவர்கள். பரம்பொருளும் கலாச்சித்தப்பாவின்மீது தன் கருணையைப் பொழிந்து தன் பொற்பாதங்களில் சரண்டையுமாறு அவரை அழைத்துக்கொண்டார்.

**இந்திரா குடும்பம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைமை பேணிய பண்பாளர் -
## எங்கள் கலாச்சித்தப்பா

அன்பும் பண்பும் ஒழுக்கமும் ஆற்றலும் கொண்ட கலாச் சித்தப்பா அமைதியானவர். ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றி, தமிழ் மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தியவர். ஆசிரியத் தொழிலில் இருந்து, இளைப்பாறிய பின் வளவில் உள்ள பயன்தரும் மரங்களுக்கு நீர் பாய்ச்சியும், கிடங்கு வெட்டி குழைகள் தாட்டும் பராமரித்து நேரத்தைப் பிரயோசனமாகக் கழித்தார். வளவு எப்போதும் சோலையாகவே கண்ணுக்குக் குளிர்ச்சியாய் இருக்கும். வீட்டின் முகப்பு மண்டபத்தில் இருந்தால் குளிர்மையையும், இயற்கையான காற்றையும் சுவாசிக்கலாம். கலாச் சித்தியும், கலாச் சித்தப்பாவும் வீட்டிற்கு வருபவர்களை அன்புடன் உபசரித்து, விருந்தோம்பல் செய்து, அனுப்பி வைப்பர். இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையில் அதிக நாட்டம் கொண்டவர் கலாச்சித்தப்பா.

சித்தப்பாவும், சித்தியும் நாங்கள் கொழும்பிலிருக்கும் போது விடுமுறைக்கு ஊருக்கு வரும்போதும், சிட்னி வந்த பின் ஊருக்கு வரும்போதும், தங்களுடைய வயதையும் பொருட்படுத்தாது, எங்களை அன்புடன் உபசரித்து, தங்கள் வீட்டில் தங்கள் கையால் அடுப்பில் சமைத்து இன்முகத்துடன் உணவு பரிமாறுவார்கள். சித்தி சமைத்துக் கொண்டிருந்தால், சித்தப்பா வரவேற்று, கதிரைகளை இழுத்துப் போட்டு இருக்கச் சொல்லி, மின்விசிறி போட்டு, அரசியல், விளையாட்டு, ஆன்மிகம் என பல விடயங்களைப் பற்றி உரையாடுவார். எங்களுடைய பண்பாட்டின் வழி, செம்பிலே தண்ணீர் கொண்டு வந்து, கைகழுவி சாப்பிட அழைப்பார்கள். வாழையிலையில் முறைப்படி உணவு பரிமாறி, போதும் போதும் என்று சொன்னாலும் வயிறும், மனமும் நிரம்பும் வரை உபசரித்து வீட்டிலுள்ள நெல்லிக்காய், வல்லாரை, வேப்பம்பூ வடகம் போன்ற பொருட்களும் தந்து முச்சக்கர வண்டியும் ஒழுங்கு செய்து வழியனுப்பி வைப்பார்கள். இனி நாங்கள் வந்தவுடன் கதவு திறந்து, வரவேற்று, கதிரை இழுத்துப்போட சித்தப்பா இல்லையென்பதை ஏற்க மனம் மறுக்கிறது.

சித்தப்பா, சித்தி இருவரும் ஆலயங்களில் (குறிப்பாக தெல்லிப்பழை குருநாதசுவாமி கோவில், காசிவிநாயகர் ஆலயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல திருப்பணிகளை முன்னெடுத்தும், திருவிழாக்கள் செய்தும், நலிவடைந்தோர்க்கு உதவியும் பல சிவபுண்ணியம் செய்வார்கள்.

சித்தப்பா பட்டினத்தார் சொல்லியபடி, கொல்லாமல், கொன்றதைத் தின்னாமல், குத்திரங் கோள்களவு கல்லாமல், கைதவரோடு இணங்காமல், கனவினும் பொய்சொல்லாமல், வாழ்ந்து வந்தமையால் பாயிற் கிடந்து, துன்பப் படாது, நள்ளிரவில், நட்டம் பயின்றாடும் தில்லைக் கூத்தன் திருவடி அடைந்து, மீண்டும் பிறவா நிலை பெற்றார்.

**மெய்ம்மையா முழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்**
**பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனு நீரைப் பாய்ச்சித்**
**தம்மையு நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்**
**செம்மையு ணிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே.**

-திருநாவுக்கரசு நாயனார்

**ஓம்சாந்தி!**

**பெறாமகள் கேசினி,**
**மருமகன் கோணேஸ்வரன்,**
**பேரர் மாதுமை, சாரங்கன்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## In loving memory of our Periappa

Though we did not spend much time together, you were always very welcoming, soft spoken, and gentle. You had an immense affection for animals and nature, which we had in common. Whether in person or via webcam, you delighted us by showing the various pets and wildlife in "Eyaama valavu".

We still cherish memories of those humid afternoons on your veranda amidst lush greenery, where you would share your vast life experiences. Without any reluctance we would listen with intrigue, whilst sipping on the masala tea that Periamma had kindly made. You had great wisdom and an excellent grasp of current affairs that we could only aspire to have. Those precious moments we had with you left an unforgettable positive influence on our young impressionable minds.

We will miss your gentle smiles, rest in peace Periappa.

**Love from**
**Prana and Theepa**
**(Sriranganathan family)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tribute to Periappa

Life is a battlefield where we all are supposed to fight until our last breath. It is inevitable that we should witness many of our beloved ones depart this life before we do. Throughout our life, all what we go thorough should be considered as training, which strengthens our soul. The tougher the life gets the mightier you become.

Yes, our Periappa was a warrior, who successfully overcame many hardships in his life and attained inner peace even when he was alive. When we were kids, we were told about Periappa's potential which was not known to many. Our Periappa was a brilliant student who excelled in education and sports at his young age. He was double promoted at school because of his sheer talent and passed the London Advanced Level examination at the age of 16. Then a disaster struck in his life. He met with an accident when he was swimming in a pond with his friends and almost drowned. The accident caused him some prolonged medical conditions. He was even advised by the doctors not to study much. Still, he managed to overcome the obstacles and built up his life confidently as a healthy man who did not almost have any health issues even in his 80s.

He was tall and had a sturdy structure and looked like a person with a long track of physical training. He was a strong-minded man with a deep resonant voice. He was so fond of us and we loved being around him. When we were kids, he would tell us old time stories and keep us thrilled. We will cherish every single moment we spent with him. Periappa will continue to be an inspiration to us. Though his body does not exist anymore in this world, his spirit will continue to guide us throughout our life. We take comfort in the fact that his mission on the earth has been fulfilled. We bid him farewell until we meet again.

May his soul attain the highest abode.

**-Suganthan, Mukunthan,**
**Jeyjenthan, Nissanthan**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் மயில்வாகனம் பொன்னம்பலம் அவர்களின் வாழ்க்கை வரலாறு.

ஈழவள திருநாட்டின் மகுடமாகத் திகழும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடபகுதியான செழிப்பு மிக்க கரணவாய் என்னும் கிராமத்தில் நில அளவையாளராகக் கடமை புரிந்து வந்த கதிர்காமர் காங்கேய உடையாருக்கு, ஏக புத்திரனாக, கதிரேசு உடையார் என்பவர் பிறந்தார். இவருக்கு சந்திரசேகரர் பாறுப்பிள்ளை என இரு மக்கள் பிறந்தனர். பாறுப்பிள்ளையின் ஏக புத்திரரான சட்டநாதர் என்பவர், அருள்மிகு வேதாரண்யஸ்வர சுவாமிக்குச் சொந்தமான வேதாமிர்தக் கரையிலுள்ள ஆதிவாரமட தர்மகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளாக பட்டமளித்து நியமிக்கப் பெற்றார். பிறப்பொழுக்கம் குன்றாமல், சுத்தாத்துவ நெறிநின்ற சைவாசார சீலராய், வாழையடி வாழையென விளங்கி வாழ்ந்த சந்திரசேகரனுக்குப் பேரனாக, கணபதிப்பிள்ளை என்பவர் பிறந்தார். இவரின் அன்பு மகளான பாறுபதிப்பிள்ளை, நீலப்பிள்ளை கணபதிப் பிள்ளை என்பவரைத் திருமணம் செய்து குல தர்மவழி நின்று நல்லறமாக நடாத்தி, குலம் கோத்திரம் விளங்க, பொன்னம்பலம் கந்தையாபிள்ளை, வேதநாயகம் எனும் மூவரைச் சற்புத்திரராகப் பெற்றெடுத்தார். இதில் கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்து விளங்கிய பொன்னம்பலம் (பொன்னுடையார்) பணக்காரப்பா எனப் பெருமையாக வாழ்ந்த திருவாளர் இராமலிங்கத்தின் மூத்த புதல்வியான பொற்பரசி வள்ளியம்மைப்பிள்ளையை 1885ஆம் ஆண்டு திருமணம் செய்து வாழ்ந்து வருங்காலத்து, பிள்ளைப்பேறு இன்மை குறித்து கவலையடைந்தவர்களாக தமது குலதெய்வங்களான மூத்த விநாயகரையும், முதலைக் குழி முருகனையும் குறித்து கடுந்தவமியற்றி வருங்காலத்து அவர்களருளால் குலங்குடி ஒழுக்க நெறி தழைத்தோங்க மூன்று ஆண் மக்களும் ஒரு பெண்மகவும் பிறந்தார்கள். இவர்களில் சிரேஷ்ட புதல்வனாக அவதரித்தவர் திருவாளர் பொன்னம்பலம் மயில்வாகனம் ஆவார். இவர் உடையார் வழித்தோன்றலில் வந்த கந்தையா வேதவனம் தம்பதிகளின் செல்லப் புதல்வியான செல்லம்மாவைத் திருமணம் புரிந்து இருவரும் இல்லற வாழ்கை இனிதே நடத்தி வந்தனர்.

இவர்களில் மூத்த மகனாகக் காலஞ்சென்ற மயில்வாகனம் பொன்னம்பலம் அவர்கள் விக்கிரம வருடம் சித்திரைமாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 9.05 மணியளவில் புனர்பூச நட்சத்திரத்தில் (1940ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி பிறந்தார்கள். இவர் தமது ஆரம்பக் கல்வியை 1944ஆம் ஆண்டு தை மாதம் இளகாமம் சைவவித்தியாலயத்தில் ஆரம்பித்தார். இவ் வித்தியாலயம் அமைந்த இடம் மழைக் காலத்தில் வெள்ளம் வழிந்தோடும் இடமாக இருந்தபடியால் இடம் மாற்றி இப்போது இருக்கும் இடத்தில் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயமாக மாற்றம் பெற்றது. ஐந்தாம் வகுப்புவரை இப்பாடசாலையில் கல்வி பயின்றார். தரம்- 06 (6th Form) லிருந்து 10th தரம் வரை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கல்வி பயின்றார். இக்காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கியதால் இருதர நிலை உயர்வுகளைப் பெற்றிருந்தார். இவர்கள் தமது 15ம் வயதில் Senior School Certificate (S.S.E) பரீட்சையில் கணிதபாடத்தில் அதிவிசேட சித்தியும் பெற்றிருந்தார்.

தமது உயர் கல்விக்காக யாழ்ப்பாணக் கல்லூரியில் (Jaffna College) 1956 ஏப்பிரல் மாதம் இணைந்தார். 1957 June Advance Leval (A/L) பரீட்சை எழுதினார். 1958ல் Degree courseல் இணைந்தார். 1959ல் B.A. பரீட்சை எடுக்க வேண்டும் பரீட்சைக்கு முன் அவர்கள் வடமாகாணம் வன்னிப் பிரதேசத்திற்கு ஒரு கல்விச் சுற்றுலா சென்றிருந்தனர். கல்விச் சுற்றுலா சென்று வீடு திரும்பிய பின் அவர் கடும் சுகவீனம் உற்றபடியால் குறித்த காலத்தில் B.A பரீட்சை எடுக்க முடியாமல் போய்விட்டது. இத்துடன் அவரின் யாழ்ப்பாணக் கல்லூரியில் பட்டப்படிப்பும் முடிவுற்றது. வீட்டில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டார். வெங்காயச் செய்கை அமோக விளைச்சலைத் தந்தது. மூத்த மகனை ஒரு தொழிலில் ஈடுபடுத்த வேண்டும்மெனத் தாயார் விரும்பினார்.

1965ம் ஆண்டு தமது 25வது வயதில் கூட்டுறவு வங்கிச் சேவையில் சேர்ந்தார். கரணவாய் மூத்தவிநாயகர் கோயிலடியிலிருந்து சுன்னாகத்திலிருந்த கூட்டுறவு வங்கிக்குத் தினமும் பிரயாணம் செய்ய வேண்டி இருந்தது. இந்த Co- Operative Bank தான் பின்னாளில் மக்கள் வங்கியாக மாற்றம் பெற்றது. அக்காலத்தில் பஸ் சேவை ஒழுங்காக இருக்கவில்லை. மூத்தவிநாயகர் கோயிலடியிலிருந்து நேரடியாகச் சுன்னாகம் செல்ல முடியாதிருந்தது. இடையில் இறங்கி வேறு பஸ் ஏறிச் செல்ல வேண்டியிருந்தது சிறிது காலம் வங்கிச் சேவையிலீடுபட்டு பின் பிரயாணக்கஷ்டம் காரணமாக இவ்வேலையிலிருந்து விலகி விட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

District Service மாவட்ட சேவைத் திட்டத்தில் இணைக்கப்பட்ட ஆசிரியர் சேவையில் 01.09.1976ல் தெரிவானார். வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆங்கில பாட உதவியாசிரியராக ஆசிரியர் தொழில் சேர்ந்தார். 1978ம் ஆண்டு நோய் வாய்ப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்த காலத்தில் ஆசிரிய கலாசாலை அனுமதிக்காக நேர்முகப் பரீட்சை தோற்றவில்லை. பின் 1979 ஆண்டு யூன் மாதம் மூன்று வருட பயிற்சி நெறியில் பலாலி ஆசிரிய கலாசாலைக்குத் தெரிவானார். 1981ம் ஆண்டு பரீட்சை எடுத்தார்.

இக் காலப்பகுதிக்குள் இவரின் இளைய சகோதர்கள் இருவருக்கும், தம்பியாருக்கு திருமணம் இனிதே நிறை வேறியிருந்தது. கடைத் தம்பியார். இவருக்கு 12 வயது இளையவர். அவர் மட்டும் திருமணமாகாமல் தாய் தந்தையருடன் இருந்தார். இவருக்குத் திருமணம் பேசிய பொழுது தெல்லிப்பழை யாமா வளவில் வசித்து வந்த, தெல்லிப்பழை கிழக்கு, சைவப்பிரகாச வித்தியாசாலை, மகாஜனாக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றிருந்த உயர் திரு. திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி ஆசிரியான் மூன்றாவது மகளான கலாதேவியை பொருத்தம் பார்த்தார்கள். 23.08.1981ல் தமது சிறிய தந்தையாருடன் மாலை மூன்று மணியளவில் பெண்வீட்டிற்கு வந்து பெண் பார்த்தார்கள் 25.05.1981ல் காலை 5.30- 6.30 மணிக்கு பொன்னுருக்கு நடைபெற்றது. 28.05.1981 இரவு 9.52- 11.04 இடையில் யாமாவளவில் திருமணம் இனிதே நிறைவேறியது. 29.05.1981 பெண் வீட்டில் விருந்துபசாரம் நடைபெற்றது. 30.05.1981ல் விவாகம் பதிவும் இடம் பெற்றது.

01.01.1982ல் வற்றாப்பளை R.C.T.M.S றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் உதவியாரியராகக் கடமை ஏற்றார். 1982-1989 வரை அப்பாடசாலையிலேயே ஆங்கில உதவிய ஆசிரியராக கடமையற்றினார். 1989ல் யாழ். வீமன்காமம் மகா வித்தியாலயத்திலயத்திற்கு இடம் மாற்றம் பெற்று 2000ம் ஆண்டு மே மாதம் 11ம் திகதி வரை அப் பாடசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்றர். யாமா வளவில் தமக்கு சீதனமாக கொடுத்திருந்த காணியில் வீடு கட்டி 10.12.1983ம் ஆண்டு குடி புகுந்தார். 90களில் வீட்டை விட்டு இடம்பெயரும் வரை குடி புகுந்த தினத்தன்று சிவபூஜை செய்து வந்தனர்.

40 வருகாலம் மனைவியுடன் இணைபிரியாமல் வாழ்ந்து வந்தார். இவர் வீட்டில் மா, பலா, தென்னை, வாழை, பப்பாசி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடை, எலும்மிச்சை, மாதுளை போன்ற மரங்களை நட்டு பயிராக்கி பராமரித்து வருவார்கள் வீட்டு வளவை சோலையாக மாற்றியமைத்துள்ளர். வீட்டைச் சுற்றி ஐந்து வேப்ப மரங்கள் உள்ளன. இரண்டு வேலையாட்கள் அடிக்கடி வேலைவக்கு வருவார்கள். தென்னோலை, குப்பைக் கிடங்கு வெட்டித்தாட்டு நீர்பாய்ச்சுவார். பிள்ளையில்லாவிட்டால் தென்னம்பிள்ளை என்று சொல்லி வளவுமுழுக்க தென்னங்கன்று நட்டு வைத்திருக்கிறார்கள்.

அவரின் 60வது 75வது வயதுகளில் நவரக்கிரக ஹோமம், இட்சுமி ஹோமம் என்பவற்றுடன் சிவபூஜை இனிதே நடைபெற்றன. 80வது வயதில் கோவிட் 19 தொற்று நோய் பரவல் காரணமாக சிவபூஜை நடைபெறவில்லை. சிறிது காலமாக அவர் வெளியே செல்வதில்லை ஓவ்வூதியம் பெறுவதற்கு மாத்திரம் போய் உடனே திரும்பி வீடு வருவர்.

அவர் தமது இறுதிக்காலம் வரை ஏதாவது செய்து கொண்டே இருப்பார். நோய்நொடி என்று கிடக்கவில்லை. கடைசி நாளன்றும் மாலை வரை தொழிற்பட்டுக் கொண்டேயிருந்தார். வழக்கமாக வரும் கூலியாளைக் கொண்டே குப்பை கூட்டி அள்ளி கிடங்கு வெட்டி தாட்டார். மாலை நுளம்புத் தொல்லைக்காக நெருப்புச் சட்டியில் வேப்பிலை போட்டு புகைக்க விட்டுக் கொண்டே இருந்தார். அப்படியே அவ்விடத்திலேயே சாய்ந்து படுத்துவிட்டார். பெறாமகள் கலையரசி வந்து பெரியப்பா எனக் கூப்பிட்டு என்ன வேண்டும் என "Nestomalt குடிக்கவேண்டும்" என்றார் Nestomalt வாயில் விட்டுகுடித்தார். அத்துடன் சாய்ந்து விட்டார். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்று இரவு 1.50 மணியளவில் இவ்வுலகை விட்டு வாழ்வை நீர்ந்தார். நொந்து மனம் வாடாமல் நோய் நொடிகள் இல்லாமல் சடுதியாக இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சிவப்பேறு பெற பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நெஞ்சம் நிறைந்த நன்றியுடன்...

எங்கள் குடும்பத் தலைவர் மயில்வாகனம் பொன்னம்பலம் அவர்கள் இவ்வுலகை விட்டு நீங்கியதை அறிந்தவுடன் வந்து அனுதாபம் தெரிவித்தவர்கள்,

சிவபதப் பேறு எய்திய வேளையில் அன்னாரது புகழுடலை அவரின் இல்லத்திற்கு எடுத்து வர சகலதுறைகளில் முயற்சி புரிந்தவர்களும், இறுதிக் கிரியையின் போது முன்னின்று நடத்தியவர்கள், சமுகம் கொடுத்தவர்கள்,

மற்றும் எழுத்து மூலம் தொலைபேசி மூலமும் சமூக வலைத்தளங்கள் மூலமும் அனுதாபச் செய்திகளை தெரிவித்தவர்களுக்கும்,

மலர்வளையம் வைத்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும்,

பல்வேறு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்களுக்கும், அஞ்சலி உரைகள் தந்துதவிய பெருமக்கட்கும் ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்துகொண்டு சிறப்பித்தவர்களுக்கும்,

நினைவு மலரை அச்சிட்டு உதவிய திருமகள் அழுத்தகத்தினர் யாவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.




யாமா வளவு,
தெல்லிப்பழை.

திருமதி. கலாதேவி பொன்னம்பலம்,
மனைவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



திருமகள் அழுத்தகம், சுன்னாகம். தொ.பே. 021 224 4510

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org